மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். மூலக் கேள்விக்கு ஒட்டியதாக துணைக் கேள்வி கேட்க்க வேண்டும்; போட வேண்டும். பர்செண்டேஜைப் பற்றிக் கேட்டால் எப்படி? திரு. பழனிவேல்.

திரு. என். பழனிவேல் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மஞ்சள் மகிமையைப் பற்றித் தெரியும் என்று கூறினார்கள். மஞ்சள் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன வகையிலே பயன்படுத்தப்படுகின்றது? அதனுடைய மகிமையைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே, இதைக் கொஞ்சம் விளக்கி பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளின் உபயோகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வாழ்க்கையிலே தினமும் அதிகமாக மஞ்சளை உபயோகித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார், வீட்டிலிருக்கின்ற பெண்களுக்கு இதைப்பற்றி அதிகம் தெரியும். இருந்தும் கூட, வேண்டுமென்றே இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறார். இருந்தாலும், அவர்கள் வீட்டிலே போய் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியாரை கேட்டாலே, நல்ல விடை கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சளை விளைவிக்கின்ற இந்த விவசாயிகளுக்கு, மஞ்சள் மண்டிக்காரர்கள் நிறைய முன்பணம் கொடுக்கிறார்கள், சாக்குகளும் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த மஞ்சள் மண்டிக்காரர்கள் கமிஷன் 3% என்று பில்லிலே கணக்குப் போட்டு வசூல் செய்கிறார்கள், ஆனால், உண்மையில் 7% அவர்களிடத்திலே வசூலிக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை மாற்றியமைப்பதற்கு ஆவன செய்ய முடியுமா? அல்லது போலீசாரைக் கொண்டு, சி. ஐ. டி.க்கள் மூலமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டை தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரநாயக்கன்பாளையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

*846-வினா— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர்

கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1978 ஏப்ரல் 7]

(அ) கோவை மாவட்டம் சீரநாயக்கன்பாளையம் காந்திஜி இன்டஸ்ட்ரீயல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட் (C.H. 65, பதிவு செய்யப்பட்டது முதல் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதற்கு நிர்வாக இயக்குனர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் செயல்படாமல் இருப்பதற்கான காரணங்களை விளக்க இயலுமா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த தொழிலியற் கூடம் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய ஒரு காலி இடத்தை நீண்ட குத்தகைக்கு எடுத்து, அதிலே அமைக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், பொதுப்பணித் துறையிலே இடத்தை ஒப்படைக்க காலதாமதம் ஏற்பட்டதன் விளைவாக, இந்தத் தொழிலியற் கூடம் நிறுவுவதற்கு கடன் உதவி அளிக்க முன்வந்திருக்கக் கூடிய ஸ்டேட் பாங்கு, இப்போது கடனுதவி அளிப்பதிலே மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே, நமக்கென்று ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு, நிதி உதவி பெற்று, இந்தக் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்க வேண்டுமென்று, இப்போது அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தக்கோலம் 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம்

*847—வினா திரு. வீ. கே. கோதண்டராமன் :

மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தக்கோலம் 'கோ-ஆப்டெக்ஸ்' சேல்ஸ் எம்போரியத்தில் 46,000 ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளது தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?